[2012 மே 9

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 239, மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. தமிழரசன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

239—

தூர் வாருதல்

***1834—திரு. கா. தமிழரசன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை கிழக்கு தொகுதி, குன்னத்தூர் பெரிய கண்மாயைத் தூர் வாரி சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"தமிழக மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே எனது வாழ்வின் குறிக்கோள்" என்று கண் துஞ்சாமல் பணியாற்றும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் மதுரை (கிழக்கு) தொகுதி குன்னத்தூர் பெரிய கண்மாயைத் தூர் வார மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, பாரம்பரியமிக்க நீர் நிலைகளைப் புனரமைக்கும் பணி திட்டம் II—ல் சேர்க்கப்பட்டு, நடப்பு நிதியாண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. தமிழரசன் அவர்கள்.*

திரு. கா. தமிழரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முதலமைச்சர், எங்கள் குடும்பத்தின் குல விளக்கு, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் கேட்டதும் கொடுத்தது அம்மா அவர்கள்தான். குன்னத்தூர் கண்மாய் 1,200 ஏக்கர் பரப்பளவு கொண்டது. 1,200 ஏக்கர் பரப்பளவு பாசனக் கண்மாயை மதுரை (கிழக்கு) தொகுதிக்குப் பெரிய விடிவுகாலமாகக் கொடுத்த புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு*

2012 மே 9]

பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 240, மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.கோ. ரமேஷ், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

240—

தொழிற்சாலை

***6138—திரு. கா.கோ. ரமேஷ்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதி, கந்திலி ஒன்றியம், செவ்வாத்தூரில் மைக்கா தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தற்போது தமிழ்நாடு கனிம நிறுவனம் சென்னைக்கு அருகில் அம்பத்தூரில் ஆண்டு ஒன்றுக்கு 1,600 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யும் வெர்மிகுலைட் தொழிற்சாலை இயங்கி வருவதானால் புதிய தொழிற்சாலை அமைப்பது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.கோ. ரமேஷ் அவர்கள்.

திரு. கா.கோ. ரமேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன். 1978 ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவர் காலத்தில் கனிம வளத் துறையின்மூலம் திருப்பத்தூர் தொகுதிக்குட்பட்ட செவ்வாத்தூர் கிராமத்தில் வெர்மிகுலைட் என்னும் அரிய வகை மூலப்பொருள் வெட்டி எடுக்கப்பட்டு பல வகைகளில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இப்பொருளானது உலகளவில் 3 நாடுகளில் மட்டுமே கிடைக்கின்றது. மிகத் தரம்